| | | |
|---|---|---|
| வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம் | | |
| இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018 | | |
| தரம் - 09 | குடியியற் கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) நாம் சமூகப் பாதுகாப்பினைப் பெறுவதற்கு முதன்முதலில் அங்கத்தவராகும் நிறுவனம்.
1) குடும்பம் 2) பாடசாலை 3) சனசமூக நிலையம் 4) கோவில்.

02) ஐக்கிய அமெரிக்காவில் நிலவிய நில அடிமை முறையை நீக்கிய முன்னாள் ஜனாதிபதி.
1) ஜோர்ச் வோசிங்டன் 2) ஆபிரகாம் லிங்கன்
3) டொனால்ட் நீகன் 4) ஜோர்ச் புஷ்.

03) சட்ட மூலாதாரங்களுள் முக்கியமானதாகவும் நாட்டின் அடிப்படைச் சட்டமாகவும் கருதப்படுவது.
1) நீதிமன்றத் தீர்ப்புக்கள் 2) பழக்க வழக்கங்கள்
3) சமயம் 4) அரசியல் திட்ட யாப்பு.

04) குற்றவியல் சட்டத்தினுள் அடங்கும் விடயமாக அமைவது.
1) சிறுவர் துன்புறுத்தல். 2) நஷ்ட ஈடு.
3) காணிப்பிரச்சினை. 4) கடன் அறவிடுதல்.

05) இலங்கையில் தற்போது செயற்படும் நீதி மன்றங்களுள் உயர்ந்த மட்டத்தில் செயற்படும் நீதிமன்றம்.
1) மேன்முறையீட்டு நீதிமன்றம் 2) உயர்நீதிமன்றம்
3) மேல் நீதிமன்றம் 4) மாகாண மேல் நீதிமன்றம்.

06) அவசர பொலிஸ் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் அழைக்க வேண்டிய தொலைபேசி எண்
1) 129 2) 119 3) 110 4) 109

07) எதிர்கால சந்ததியினரின் தேவைகளைக் கருத்தில் கொண்டும் சூழலைப் பாதுகாத்து வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி
1) பொருளாதார அபிவிருத்தி 2) சூழல்நேய அபிவிருத்தி
3) பேண்தகு அபிவிருத்தி 4) நிலையற்ற அபிவிருத்தி.

08) தொழில்நுட்ப மாற்றத்தின் மூலம் மனித வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாதகமான மாற்றம்.
1) நேரம் மீதமாதல் 2) சமூகத் தொடர்புகள் அதிகரித்தல்
3) பயன்பாடு அதிகரித்தமை 4) பொருத்தமற்ற நுகர்வு அதிகரித்தல்.

09) கூட்டுறவு இயக்கத்தின் தந்தை.
1) ரொபேட் ஓவான் 2) ரொபேட் நொக்ஸ்
3) பேர்டன் பவல் 4) கால்மாக்ஸ்.

10) நேரடி ஜனநாயகத்தின் பிறப்பிடமாகக் கருதப்படும் நாடு.
1) பிரித்தானியா 2) பிரான்ஸ் 3) கிரேக்கம் 4) இந்தியா.

11) ‘‘சனநாயகம் அனைவருக்கும் உரிமைகளைப் பெற்றுத் தரும் ஒரு ஆட்சி முறையாகும்’’ எனக் கூறியவர்.
1) சீலர் 2) ஆப்பிரகாம் லிங்கன் 3) காணர் 4) ஒஸ்ரின்.

12) ஒரு கட்சி ஆட்சி முறை நிலவும் நாடுகளுள் ஒன்று.
1) இலங்கை 2) கியூபா 3) ஐக்கிய அமெரிக்கா 4) ஐக்கிய இராச்சியம்.

13) இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் மக்களுக்குரிய உரிமைகளுள் மிக முக்கியமானது.
1) அரசியல் கட்சிகள் அமைத்தல் 2) சர்வஜன வாக்குரிமை
3) வேட்பாளராக நிற்றல் 4) அரசியல் கட்சிகளை விமர்சித்தல்.

14) 1910 குறுமக்கலம் அரசியல் யாப்பின் படி சட்டவாக்க கழகத்திற்குக் கல்வி கற்ற இலங்கையர் சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்.
1) சேர். பொன். அருணாச்சலம் 2) டீ.எஸ் சேனாநாயக்கா
3) சேர். பொன் இராமநாதன் 4) டி.பி. ஜெயதிலக.

15) இலங்கையில் முதன்முதலில் அமைக்கப்பட்ட மாநகர சபைகளுள் ஒன்று அமைந்துள்ள இடம்.
1) கண்டி 2) யாழ்ப்பாணம் 3)அநுராதபுரம் 4) திருகோணமலை

16) மாநகர சபையொன்றின் தலைவர் அழைக்கப்படும் முறை.
1) தலைவர் 2) நகரபிதா 3) துணை நகர பிதா 4) நகர ஆணையாளர்.

17) உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் அமைப்பு.
1) தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு 2) தேர்தல் திணைக்களம்
3) மாகாண சபைகள் 4) உள்ளூராட்சி மன்றங்கள்.

18) 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி 1987 ஆம் ஆண்டு 13 ஆவது சீர்திருத்தத்திற்கமைய உள்ளூராட்சி மன்றங்களை மேற்பார்வை செய்வது மற்றும் நிருவகிப்பது தொடர்பான அதிகாரம் பெற்ற அமைப்பு.
1) மத்திய அரசு 2) மாகாண சபை 3) உயர்நீதிமன்றம் 4) மாவட்ட நீதிமன்றம்

19) ஜனநாயக நாட்டில் வாழும் பிரசை ஒருவரின் முக்கியமான கடமைகளுள் ஒன்று.
1) அரசியல் யாப்பையும் சட்டத்தையும் பாதுகாத்தல்.
2) தான் விரும்பும் சமயத்தைப் பின்பற்றுதல்.
3) தனது கருத்தை வெளியிடுதல்.
4) சட்ட அங்கீகாரம் பெற்ற தொழிலொன்றைச் செய்தல்.

20) "தந்தை நாட்டுக்காக" என்ற மகுடவாசகத்தைக் கொண்டுள்ள இலங்கைப் பாதுகாப்புப்படை.
1) இராணுவப்படை 2) கடற்படை 3) பொலிஸ்படை 4) விமானப்படை.

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களைத் தெரிவு செய்து விடை தருக.**

*01)*

1) சமூகப் பாதுகாப்பு என்றால் என்ன? (3 புள்ளிகள்)

2) சமூக பாதுகாப்பிற்குக் குடும்பத்தினால் ஆற்றப்படும் பணிகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

3) சமூகப் பாதுகாப்புத் தொடர்பாகப் பாடசாலையின் பங்களிப்பு மூன்று தருக? (3 புள்ளிகள்)

4) சமூக விரோதச் செயல்களைத் தடுப்பதற்கும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் செயற்படுகின்ற நிறுவனங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

*02)*

1) சட்டம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

2) சட்டத்தின் பண்புகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

3) இலங்கையில் தற்போது காணப்படும் நீதிமன்றக் கட்டமைப்பிலுள்ள நீதிமன்றங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

4) சட்டமா அதிபர் திணைக்களகத்தின் பணிகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

*03)*

1) நீதிமன்றம் தொடர்பான பொறுப்புக்களும் கடமைகளும் மூன்று தருக? (3 புள்ளிகள்)

2) நபர்களிடையே ஏற்படும் பிணக்கொன்றை இணக்க சபைக்குக் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

3) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் கிடைக்கும் சேவைகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

4) பாதுகாப்புப்படை தொடர்பான தனி நபரின் பொறுப்புக்களும் கடமைகளும் மூன்று தருக? (3 புள்ளிகள்)

*04)*

1) தொழில் நுட்பம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

2) தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாகச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

3) தொழில்நுட்பம் விவசாயத்துறையில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் மூன்று தருக?(3 புள்ளிகள்)

4) புதிய முன்னேற்றத்துடன் விரிவடைந்துள்ள தொழில்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

*05)*

1) நல்வாழ்வு என்றால் என்ன? (3 புள்ளிகள்)

2) நல்வாழ்விற்கான பண்புகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

3) கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

4) பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாணவர் பெறக்கூடிய சேவைகள் மூன்று தருக?

(3 புள்ளிகள்)

06)

1) சனநாயகம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
2) நேரடி சனநாயக ஆட்சி முறையை இன்று செயற்படுத்த முடியாமைக்கான தடைகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)
3) பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)
4) சனநாயக ஆட்சி முறையின் வெற்றிக்குத் தேவையான காரணிகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

07)

1) உள்ளூராட்சி மன்றங்களின் மூன்று வகைகளையும் தருக? (3 புள்ளிகள்)
2) உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் போது கவனிக்கப்படும் மூன்று விடயங்களைத் தருக? (3 புள்ளிகள்)
3) தேசிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு மூன்று தருக? (3 புள்ளிகள்)
4) தேசிய கொள்கையொன்றின் தேவை பற்றிய மூன்று விடயம் தருக? (3 புள்ளிகள்)